| O.S.No. 234/2023 | PW1: திருமதி. வேண்டா (எ) லட்சுமி<br>க/பெ. திரு. ஏழுமலை | 13-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது தாத்தா பெயர் அர்ஜுன கவுண்டர். என் தாத்தாவிற்கு பெரியபாப்பா என்கின்ற ஒரு மகளும், பொன்னுசாமி, சபாபதி ஆகிய இரண்டு மகன்களும் வாரிசுகள். என் தந்தை சபாபதிக்கு 4 பெண்கள், ஒரு ஆண் வாரிசுகள் ஆவார்கள். அதில் அம்சா, அமுலு ஆகிய இருவர் இறந்துவிட்டார்கள். தற்போது நான், தவமணி, சித்ரா ஆகியோர் மட்டுமே உள்ளோம். 1–ம் பிரதிவாதி மணிமேகலை எனது பெரியப்பாவின் மகள் ஆவார். 2 முதல் 5 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள்.

2. வழக்கு சொத்தின் சர்வே எண்.162 என்று நினைக்கிறேன், அதன் விஸ்தீரனம் 6 சென்ட் ஆகும். பகவான் பெயரில் எவ்வளவு சென்ட் வந்தது என்றால் 1 ½ வந்தது. அதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தற்போது 41 வயது. அர்ஜுன கவுண்டர், அம்மாகன்னு ஆகிய இருவரும் இறந்துவிட்டார்கள், அவர்கள் எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன்.

3. எனது கணவர் பெயர் ஏழுமலை. ஏழுமலையின் முதல் மனைவி பெயர் அம்சா. அம்சா இறந்துவிட்டார், பின்னர் ஏழுமலைக்கு அமுலுவை திருமணம் செய்து வைத்தார்கள். அமுலு இறந்தபிறகு நான் ஏழுமலையை மூன்றாவதாக திருமணம் செய்துகொண்டேன். மேற்படி திருமணங்களை சபாபதி, எனது தந்தை பொன்னுசாமியும்தான் செய்து வைத்தார்கள். எனக்கு 25 வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடந்தது, அப்போது எனக்கு 17 வயது ஆகும்.

4. பொன்னுசாமியும், சபாபதியும் 1996–ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்படுத்தி அதனை பதிவு செய்துகொண்டனர் என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண். 249/1– ல் 44 ½ ஏர்ஸ் சொத்தானது அர்ஜுன கவுண்டர் மகன்

பொன்னுசாமி, ரங்கநாதன் மகன் குள்ளன், குட்டையான் மனைவி இராமாயி, முருக கவுண்டர் மகன் ஏழுமலை, ரங்கநாத கவுண்டர் மகன் பொன்னுசாமி, துரைசாமி மகன் செல்வகுமார், மன்னுகவுண்டர் மகன் வெள்ளை, குள்ள கவுண்டர் மகன் காந்தி, கண்ண கவுண்டர் மகன் மீனாட்சி ஆகிய 9 பேருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி 9 பேருக்கும் தலா 12 சென்ட் பாத்தியம் என்று சொன்னால் சரிதான்.

5. குட்டையான் மனைவி இராமாயி, ரங்கநாதன் மகன் குள்ளன் ஆகியோரை தவிர மற்ற அனைவரும் அவர்களுடைய இடத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அர்ஜுன கவுண்டர், ரங்கநாதன், குட்டையன் ஆகியோர் சடைய கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். குட்டையன் மகள் இராமாயிக்கு 3 பெண் குழந்தைகள், 1 ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். இராமாயி எனக்கு அத்தை ஆவார். இராமாயி மலையான்கொடை கிராமத்தில் திருமணம் செய்து கொண்டு அங்கேயே வசித்து வருகிறார். இராமாயிக்கு வந்த 12 சென்ட்டினை சபாபதி, பொன்னுசாமி ஆகிய இருவருக்கும் இராமாயி வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தந்தை சபாபதி 12 சென்ட்டினை பொன்னுசாமிக்கு கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6. அதேபோல் இராமாயி கொடுத்த 12 சென்ட்டில் 6 சென்ட் என் தந்தைக்கும், மற்றொரு 6 சென்ட் ரங்கநாதன் மகன் குள்ளன் என்பவருக்கும் ஒதுக்கப்பட்டு அனுபவித்து வந்தனர் என்றால் அது எனக்கு தெரியாது. பொன்னுசாமிக்கு வந்த 12 சென்ட்டினை பொன்னுசாமியின் வாரிசுகள் 2022-ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டனர் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரப்படி ஏழுமலைக்கு 6 சென்ட் நிலம் A ஷெட்யூல் பாகமாக வந்தது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதேபோல், ஏழுமலையின் தம்பி பகவானுக்கு C ஷெட்யூல் சொத்தாக 6 சென்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அது என்னுடைய பாகம்.

7. எனது சொத்தின் ஜக்குபந்தி என்ன என்றால் கிழக்கே முருகன் பாகமனை, மேற்கே முருகன் சூலை இடம், வடக்கே இராமாயி இடம், தெற்கே பொன்னுசாமி இடம் உள்ளது. எனது சொத்து விவரத்தில் பொன்னுசாமியின் பாக மனைக்கு வடக்கு என்று குறிப்பிட்டுள்ள பொன்னுசாமி எனது பெரியப்பா ஆவார். பிரதிவாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ள ஜக்குபந்திகளை படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை. 20.08.2014-ல் எனது தந்தை எனது பெயருக்கு 6 சென்ட் இடத்தினை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார்.

8. வா.சா.ஆ.1 - ல் பூர்வீகமாய் கிடைத்து என்னுடைய பெயரில் 395 கூட்டுப்பட்டாவாக இருந்து வரும் சொத்து என்ற வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 249/1-ல் 0.44.5 ஏர்ஸில் முத்து வகையறா காலி மனைக்கு தெற்கு, பொன்னுசாமி பாக மனைக்கு வடக்கு, தெருவுக்கு மேற்கு, சூலை முருகன் பாக மனைக்கு கிழக்கு, இதன் மத்தியில் 0.2.5 ஏர்ஸ்க்கு 0.06 சென்ட்டுக்கு 2616 சதுர அடி கொண்ட காலிமனை என்று வா.சா.ஆ.1-ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் கண்டுள்ள சொத்திற்குத்தான் வழக்கு போட்டுள்ளேன்.

9. வா.சா.ஆ.2-ல் சர்வே எண். 249/1-ல் 0.44.5 ஏர்ஸில் 9-ல் 1 பாகம் 0.12 சென்ட் ஜக்குபந்தி பொது தெருவுக்கு மேற்கு, முருகன் வீட்டிற்கு கிழக்கு, ஏழுமலை பாக மனைக்கு வடக்கு, வேண்டா காலி மனைக்கு தெற்கு, இதன் மத்தியில் 0.6 சென்ட் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அது பொய்யான ஆவணம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ள ஜக்குபந்திக்கும், ஏழுமலை மற்றும் பகவான் சொத்தினுடைய ஜக்குபந்திக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

10. வா.சா.ஆ.1-ல் கண்டுள்ள சொத்தினை பிரதிவாதிகள் பிரச்சனை செய்யவில்லை என்றாலும், பகவான் சொத்தினை நான் எனது சொத்து என்று பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள்

எனக்கு வந்த சொத்தில் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், பகவானுக்கு வந்த சொத்தினைத்தான் நான் பிரதிவாதிகளுடன் பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் தள்ளுபடி செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.13 13:39:06 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**